RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 285 | அக்டோபர் 18, 2026 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# "ஜனநாயகம் என்பது குழப்பத்தை விதைப்பதற்கான உரிமம் அல்ல"

## ஆட்சி மாற்றம் கோருவோருக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பதில்



புதுடெல்லி: அக்.18-

எஸ்ஐ ஆர் விவகாரத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ், சிஜேபி சார்பில் தொடர் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இது குறித்து மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷண் செய்தியாளர்களிடம் கூறும்போது, "எதிர்க்கட்சியினர் ஆட்சியை மாற்ற விரும்புகிறார்கள் என்று மத்திய அரசு குற்றம் சாட்டுகிறது. தேர்தல்கள் முறையாக நடைபெறுவதை உறுதி செய்யவே நாங்கள் தற்போது போராடிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால், இத்தகைய கொடூரங்கள் தொடருமானால், நிச்சயமாக ஆட்சி மாற்றம் ஏற்படும். ஆமாம்... நாங்கள் அனைவரும் ஆட்சி மாற்றத்தையே விரும்புகிறோம். இதில் என்ன தவறு இருக்கிறது?" என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலடி தரும் வகையில் மத்திய அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறும்போது, "போராட்டக் குழுவினர், நாட்டின் இளைஞர்களைக் குழப்ப அரசியலில் பகடைக்காய்களாக மாற்ற முயன்றுள்ளனர். வங்கதேசத்தில் நிகழ்ந்தது போன்றதொரு அரசு மாற்றத்தை அரங்கேற்றுவதே அவர்களின் நோக்கமாக உள்ளது.

உண்மையில், அவர்களில் ஒருவர் செய்தியாளர் சந்திப்பில், இந்த ஆட்சி மாற்றத்துக்குத் தாங்கள் வங்கதேசத்திலிருந்து ஊக்கம் பெற்றதாக தெரிவித்தார்.

மற்றொருவரோ, மத்திய அரசைக் கவிழ்க்க வேண்டும் என்று துணிச்சலாக அழைப்பு விடுத்தார். இது அவர்களின் ஒரே நோக்கத்தைத் தெளிவாகக் காட்டுகிறது. ஜனநாயகம் என்பது குழப்பத்தை விதைப்பதற்கான உரிமம் அல்ல. இதை மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தியும் அவரது சகாக்களும் புரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

## டெல்லி ராம்லீலா மைதானத்தில் ராவணனுடன் 30 அடி உயர 'கரப்பான்பூச்சி' உருவ பொம்மையையும் எரிக்க முடிவு

புதுடெல்லி, அக்.18-

டெல்லி ராம்லீலா மைதானத்தில் ராவணன் உருவபொம்மையுடன் 30 அடி உயர கரப்பான்பூச்சி உருவபொம்மையையும் எரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி(சிஜேபி) டெல்லியில் தொடர் போராட்டங்களை நடத்தி வருகிறது. இதனால், ஆளும் அரசியல் கட்சிகளின் எதிர்ப்புக் குறியீடாக கரப்பான்பூச்சி மாறியுள்ளது.



தசரா பண்டிகையி ன்போது டெல்லியில் ராவணன், கும்பகர்ணன், மேகநாதன் ஆகியோரின் உருவ பொம்மைகள் எரிக்கப்படுவது வழக்கம். இந்த ஆண்டு இந்த உருவபொம்மைகளுடன் 30 அடி உயரமுள்ள கரப்பான் பூச்சி உருவ பொம்மையையும் எரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவை, வடமேற்கு டெல்லியின் பிதாம்புரா பகுதியில் நடைபெறும் ராம்லீலா நிகழ்வை நடத்தும் 'ஸ்ரீ கேசவ் ராம் லீலா கமிட்டி' எடுத்துள்ளது.

இது குறித்து ஸ்ரீகேசவ் ராம்லீலா கமிட்டியினர் வெளியிட்டுள்ள செய்திக்கு றிப்பில் கூறியுள்ளதாவது:

கரப்பான் பூச்சி என்பது அழுக்கை யும் அசுத்தத்தையும் குறிப்பதாகும். தூய்மை இந்தியா, தூய்மை டெல்லி ஆகிய பிரச்சாரங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தீயவற்றின் மீது நன்மையின் வெற்றியை நிலைநாட்டவும் இந்த கரப்பான்பூச்சி உருவ பொம்மை எரிக்கப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடந்ததாகக் கூறி, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாருக்கு எதிராக சிஜேபியினர் தீவிரப் போரா ட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தலைநகர் டெல்லியின் அரசியல் சூழல் மிகவும் பரபர ப்பாக உள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதற்கு அந்தக் கமிட்டியின் தலைவரும், பாஜக எம்எல்ஏவுமான அசோக் கோயல் கூறு ம்போது, 'உருவ பொம்மை எரிப்பு நிகழ்வில் கரப்பா ன்பூச்சியை சேர்த்ததற்கு எந்தவித அரசியல் உள்நோக்கமும் இல்லை' என்று தெரிவித்துள்ளார்.

வியாபாரிகள் புகார்:

இதனிடையே, சிஜேபியின் போராட்டத்தால் டெல்லியில் வியாபாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் எழுந்துள்ளது.

இத்தகைய போரா ட்டங்களும் அதனால் விதிக்கப்படும் போக்குவ ரத்து கட்டுப்பாடுகளும் சந்தைக்குச் செல்வதைத் தடுத்து, சிறு வணிகர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிப்பதாக பாலிகா பஜார் வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். இதைத் தொடர்ந்து வியாபாரிகள் சங்கம் சார்பில் டெல்லி நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

டெல்லியின் முக்கிய அமைப்பான 'சேம்பர் ஆப் டிரேட் அண்ட் இண்டஸ்டிரீஸ்' அமைப்பு சார்பில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு ஒரு கடிதம் எழுதப்பட்டுள்ளது. இதில், டெல்லி போராட்டத்தால் வியாபாரிகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.2,000 கோடி இழப்பு ஏற்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனால், தீபாவளி பண்டிகை வரை போராட்டங்களுக்கு தடை விதிக்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## பிரதமர் நரேந்திர மோடி டிசம்பர் 11-ல் கனடா பயணம்

புதுடெல்லி: அக்.18-

பிரதமர் நரேந்திர மோடி 2 நாள் பயணமாக வரும் டிசம்பர் 11-ம் தேதி கனடா செல்ல உள்ளார். கனடாவின் ஒட்டாவா நகரில் உள்ள இந்தியத் தூதரகம் தனது சமூக வலைதளப்பக்கத்தில் வெளியிட்ட பதிவில், "பிரதமர் நரேந்திர மோடி, டிசம்பர் 11-12 தேதிகளில் கனடாவுக்குப் பயணம் மேற்கொள்வார்.



பிரதமர் மோடியும் கனடா பிரதமர் மார்க் கார்னியும் சமீபத்தில் தொலைபேசியில் உரையாடினர். அப்போது, இரு நாடுகளுக்கு இடையேயான உறவில் ஏற்பட்டுள்ள நேர்மறையான உத்வேகத்தைத் தொடர இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். மேலும் வர்த்தகம், எரிசக்தி, தொழில்நுட்பம், பாதுகாப்பு மற்றும் மக்கள் இடையேயான உறவுகள் ஆகியவற்றில் உறுதியான பலன்களை அடைய பாடுபடுவது என்றும் ஒப்புக் கொண்டனர்" என கூறப்பட்டுள்ளது.

பிரதமர் மோடியின் இந்தப் பயண தேதியை கனடா பிரதமர் மார்க் கார்னியும் உறுதிப்படுத்தி உள்ளார். இந்த இரு நாள் பயணத்தின்போது, பிரதமர் மோடி ஒட்டாவா மற்றும் டொராண்டோ ஆகிய நகரங்களுக்குச் செல்வார் என்றும் அங்கு அவர் இந்திய வம்சாவளியினர் பங்கேற்கும் நிகழ்ச்சியில் கலந்துகொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இருதரப்பு உறவில் முன்னேற்றம்

ஜஸ்டின் ட்ரூடோ பிரதமராக இருந்தபோது, கனடா, இந்தியா இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. மார்க் கார்னி பிரதமரான பிறகு இருதரப்பு உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில்தான் பிரதமர் மோடி அங்கு பயணம் மேற்கொள்ள உள்ளார்.

## 227-வது நினைவு தினத்தை முன்னிட்டு வீரபாண்டிய கட்டபொம்மன் படத்துக்கு ஆளுநர் மரியாதை

சென்னை, அக்.18-

விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்ட பொம்மனின் 227-வது நினைவு நாள் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதையொட்டி, கிண்டி ஆளுநர் மாளிகையில் வைக்கப்பட்டிருந்த அவரது படத்துக்கு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

முதல்வர் மற்றும் பல்வேறு அரசியல்கட்சித் தலைவர்கள் வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவுகூர்ந்து புகழாரம் சூட்டினர்.



முதல்வர் விஜய்: ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறைக்கு அடிபணியாமல் உரிமைக்காகவும், சுயமரியாதைக்காகவும் இறுதிவரை போராடியவர் வீரபாண்டிய கட்டபொம்மன்.

அநீதிக்கு எதிராகக் குரல் கொடுக்கும் துணிவும், உரிமைகளைக் காக்கும் உறுதியும், தாய் மண்ணை போற்றும் உணர்வும் ஒவ்வொருவரிடமும் வளர வேண்டும் என்பதற்கு அவரது வாழ்க்கை, ஒரு வரலாற்று பாடமாகும்.

திமுக தலைவர் மு.க.ஸ்டாலின்: தூக்கு மேடைக்கு நடந்து செல்லும்போதும் துணிச்சலோடும், கர்வத்தோடும் சென்ற விடுதலை போராளி வீரபாண்டிய கட்டபொம்மன்.

மானம்தான் பெரிதென வாழ்ந்து, அந்நியர் ஆட்சிக்கு எதிரான கனலை மக்கள் மனதில் விதைத்த அவரது வீரத்துக்கு தலைவணங்குகிறேன். தமிழ்நிலத்தின் தன்மானம் காத்த தியாகி வீரபாண்டிய கட்டபொம்மன் வாழ்க.

அதிமுக பொதுச்செயலாளர் பழனிசாமி: ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிய மறுத்து, தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக தன் உயிரையே தியாகம் செய்த பாஞ்சாலங்குறிச்சியின் மாவீரர் வீர பாண்டிய கட்டபொம்மனின் நினைவு நாளில், தாய்நாடு காக்க மரண கயிற்றையே அரவணைத்துக் கொண்ட அவர்தம் தீரத்தையும், தியாகத்தையும் போற்றி வணங்குகிறேன்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்: ஆங்கிலேயர்களின் அடக்குமுறைக்கும், அந்நிய ஆட்சிக்கும் அடிபணிய மறுத்து, தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக துணிச்சலுடன் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மனின் வீரமும், தியாகமும் இந்திய வரலாற்றில் என்றும் அழியாது இடம்பெறும்.

அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன்: ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்துக்கு அஞ்சாமலும், அடக்குமுறைக்கு அடிபணியாமலும், மண்ணின் உரிமைக்காகவும் மக்களின் விடுதலைக்காகவும் துணிந்து நின்ற மாவீரர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவரது வீரத்தையும் தியாகத்தையும் எந்நாளும் நினைவில் வைத்து வணங்கிடுவோம்.

வீ த லீடர்ஸ் தலைவர் அண்ணாமலை: ஆங்கிலேய ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அஞ்சாமல் நின்று, தாய்நாட்டின் சுதந்திரத்துக்காக இறுதிவரை போராடி, தன்னுயிரை தியாகம் செய்த வீரபாண்டிய கட்டபொம்மனின், துணிச்சலும், தியாகமும் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும்.

இதேபோல் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி, திமுக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி. உள்ளிட்டோரும் வீரபாண்டிய கட்டபொம்மனை நினைவுகூர்ந்தனர்.

## எஸ்ஐஆர் நடவடிக்கையை விமர்சித்த அமெரிக்க எம்.பி. பிரமிளாவுக்கு இந்தியா கடும் கண்டனம்

வாஷிங்டன், அக்.18-

இந்தியாவில் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணி (எஸ்ஐஆர்) நடவடிக்கையின்போது 13 கோடி வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாகக் கூறி, அமெரிக்க ஜனநாயகக் கட்சி எம்.பி. பிரமிளா ஜெயபால் நேற்றுமுன்தினம் கவலை தெரிவித்திருந்தார்.

மேலும், இந்தியாவில் நடைபெறும் போராட்டங்களுக்கும் ஆதரவு தெரிவித்திருந்தார். இந்நிலையில், பிரமிளா ஜெயபாலின் கருத்துக்கு, இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.



இது தொடர்பாக, அமெரிக்காவுக்கான இந்தியத் தூதர் வினய் மோகன் குவாத்ரா, தனது சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில் கூறியிருப்பதாவது:

இந்தியாவின் தேர்தல் மற்றும் அரசியல் நடைமுறைகள் குறித்து பிரமிளா ஜெயபால் வெளியிட்டுள்ள கருத்துகள், இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் ஏற்றுக்கொள்ள முடியாத தலையீடாகும். இது கடும் கண்டனத்துக்குரியது.

மேலும், இந்தியா துடிப்பான ஜனநாயக நாடு. வலுவான, சுதந்திரமான அரசியலமைப்பு அமைப்புகளையும், சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை நடத்துவதில் நீண்டகாலப் பாரம்பரியத்தையும் கொண்டுள்ளது. பிரமிளா ஜெயபாலின் தவறான புரிதல்களைப் போக்குவதற்காக அவருடன் ஆக்கப்பூர்வமான உரையாடலை மேற்கொள்ள எப்போதும் தயாராக இருக்கிறோம். இவ்வாறு இந்தியத் தூதர் தெரிவித்துள்ளார்.

## வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்

சென்னை, அக்.18-

தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: 2027 ஜனவரி 1-ம் தேதியை தகுதியேற்பு நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் மேற்கொள்வதற்கான அறிவிப்பை இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

அதன்படி, புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம்-2027-ன் படி வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவோ, திருத்தம், நீக்கம், இடமாற்றம் செய்யவோ விரும்பும் வாக்காளர்கள், தகுதியுள்ள குடிமக்களும் உரிய படிவங்களை நவம்பர் 12 முதல் டிசம்பர் 11 வரை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அல்லது வாக்காளர் பதிவு அலுவலர், உதவி வாக்காளர பதிவு அலுவலர் அலுவலகங்களில் அளிக்கலாம்.

மேலும் இணையதளம் (www.voterportal.eci.gov.in) மற்றும் கைப்பேசி செயலி (ECINET) மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 2027-ம் ஆண்டு ஜனவரி 1, ஏப்ரல் 1, ஜூலை 1, அக்டோபர் 1 ஆகிய தேதிகளில் 18 வயது பூர்த்தி அடைபவர்களும் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க விண்ணப்பிக்கலாம் . தகுதியுள்ள குடிமக்கள் வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் பங்கேற்க வேண்டும்.

**present sale for all over Tamil Nadu**

**தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது**



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி மற்றும் அதை ஒட்டியுள்ள டோல்கேட் பகுதியில்

# நள்ளிரவு மற்றும் பகல் நேரங்களில் தொடர்ச்சியாக டீசல் திருடும் தொழில் படுஜோர்





திருப்பத்தூர், அக்.18–

திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட பெத்தகல்லுப்பள்ளி ஊராட்சி மற்றும் அதை ஒட்டியுள்ள டோல்கேட் பகுதியில் நள்ளிரவு மற்றும் பகல் நேரங்களில் தொடர்ச்சியாக டீசல் திருடும் தொழில் படுஜோராக நடைபெற்று வருகிறது. தேசிய நெடுஞ்சாலையில் நீண்ட தூரம் பயணிக்கக்கூடிய லாரிகள் மற்றும் கனரக வாகனங்கள், இந்த டோல்கேட் பகுதியில் சற்று ஓய்வெடுப்பதற்காக நிறுத்தப்படுகின்றன. அந்த நேரத்தைக் குறிவைத்து இயங்கும் ஒரு கும்பல், வாகனங்களில் லிட்டர் கணக்கில் டீசலைத் திருடி சட்டவிரோதமாக விற்பனை செய்து வருகிறது.

இதனைத் தட்டிக்கேட்கும் உள்ளூர் பொதுமக்களையும், லாரி ஓட்டுநர்களையும் பார்த்து அந்த கும்பல் மிகவும் திமிராகவும் தெனாவட்டாகவும் பதிலளித்து வருகிறது. "நாங்கள் சும்மா திருடவில்லை; உள்ளூர் காவல் துறையினருக்கு முறையாக மாமூல் கொடுத்துவிட்டுத்தான் இந்தத் தொழிலைச் செய்கிறோம். உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று பகிரங்கமாக மிரட்டல் விடுத்து வருகிறது.

காவல்துறையின் பெயரையே சொல்லி வெளிப்படையாக நடைபெறும் இந்த டீசல் திருட்டினால், அந்தப் பகுதியில் சட்டம்-ஒழுங்கு கேள்விக்குறியாகியுள்ளது.

எனவே, திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உடனடியாக தலையிட்டு, பெத்தகல்லுப்பள்ளி டோல்கேட் பகுதியில் தீவிர விசாரணை நடத்தி, சம்பந்தப்பட்ட டீசல் திருட்டு கும்பல் மீதும், அவர்களுக்கு உடந்தையாக செயல்படுபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.







# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் திமுக மறுசீரமைப்பு கூட்டம்

கிருஷ்ணகிரி, அக்.18–

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் 3 இடங்களில் திமுக மறுசீரமைப்பு கூட்டம் நடந்தது.

கிருஷ்ணகிரி திமுக கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஊத்தங்கரை, பர்கூர், கிருஷ்ணகிரியில், திமுக மறுசீ ரமைப்பு கூட்டம் நடந்தது. கிருஷ்ணகிரி தேவராஜ் மகாலில் நடந்த கூட்டத்திற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் தலைமை வகித்தார். மேலி டப்பார்வை யாளர்களான முன்னாள் எம்.பி., கிருஷ்ணசாமி, திமுக மகளிர் தொண்டரணி மாநில செயலாளர் நாமக்கல் ராணி ஆகியோர் பங்கேற்று பேசினார். அப்போது அவர்கள் பேசியதாவது: திமுக தலைவர் மு.க.ஸ்டாலின், மற்றும் இளைஞரணி செயலாளரும், எதிர்கட்சி தலைவருமான உதயநிதி ஆகியோர் கட்சியை கட்டமைக்க, புதிய விதிகள், முடிவுகளை அறிவித்துள்ளனர். அதன்படி, 30,000 பேருக்கு ஒன்றியம், 40,000 பேருக்கு நகரம், 15,000 பேருக்கு பேரூர் நிர்வாகிகள் நியமிக்க வேண்டும். கட்சியில் இளைஞர்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும், என்பன உள்ளிட்ட விதிகளை வகுத்துள்ளனர். இதில், அனைவரும் ஒன்றிணைந்து கட்சி தலைமைக்கு கட்டுப்பட்டு, விதிகளுக்கு உட்பட்டு, வளர்ச்சியின் பாதைக்கு செல்ல பாடுபட வேண்டும். திமுக ஆட்சி சாதனைகளையும், தற்போதைய ஆட்சியின் குளறுபடிகளையும் வீடுகள் தோறும் கொண்டு சேர்க்க வேண்டும். திமுக எதிர்கட்சியாக செயல்படும் போது, கூடுதல் எழுச்சியோடு இருக்கும் என்பதை மீண்டும் நிரூபிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினர்.

கூட்டத்தில், முன்னாள் மாவட்ட செயலாளர் செங்குட்டுவன், முன்னாள் சுகவனம், வெற்றிச்செல்வன், கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் தட்ரஹள்ளி நாகராஜ், மாநில வர்த்தகரணி துணை செயலாளர்கள் கேவிஎஸ். சீனிவாசன், அன்பரசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசுமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கதிரவன், நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேலுமணி, முன்னாள் நகர செயலாளர் நவாப், மற்றும் ஒன்றிய செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் உளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர்.வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தலைமையில் நடைபெற்றது



தேனி, அக்.18–

தேனி மாவட்டத்தில் அக்டோபர் மாதம் வரை ஆண்டு மழையளவான 627.1 மி.மீ-க்கு தற்பொழுது வரை 560.27 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது. இது அக்டோபர் மாதம் வரை ஆண்டு இயல்பான மழையளவில் 66.83 மி.மீ குறைவாகும். அக்டோபர் 2026 மாதத்திற்கான இயல்பு மழையளவான 179.7 மி.மீ-க்கு தற்பொழுது வரை 100.56 மி.மீ மழை பெறப்பட்டுள்ளது.

இது அக்டோபர் மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 79.14 மி.மீ குறைவாகும். தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 5222 ஹெக்டர் பரப்பிலும், சிறுதானியம் 1886 ஹெக்டர் பரப்பிலும், பயறு வகைகள் 1456 ஹெக்டர் பரப்பிலும், எண்ணெய்வித்துப் பயிர்வகைகள் 708 ஹெக்டர் பரப்பிலும், தோட்டக்கலை பயிர்களான பழப்பயிர்கள் 19,390 ஹெக்டர் பரப்பிலும், காய்கறி பயிர்கள் 7,135 ஹெக்டர் பரப்பிலும், மலைத்தோட்ட பயிர்கள் 35,035 ஹெக்டர் பரப்பிலும், நறுமணப்பயிர்கள் 3,170 ஹெக்டர் பரப்பிலும், மலர்ப்பயிர்கள்

534 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 91 மெ.டன்னும், சிறுதானியங்கள் 12.89 மெ.டன்னும், பயறு வகை விதைகள் 21 மெ.டன்னும், எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் 1.288 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் நடப்பு பருவ சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 2,089 மெ.டன்னும் (MFL, Spic & IFFCO), DAP 936 மெ.டன்னும் (Green star, IPL & IF-FCO) பொட்டாஷ் 983 மெ.டன் (IPL) மற்றும் கலப்பு உரங்கள் 4,440 மெ.டன்னும் (Fact, GFL, CIL, IFFCO) தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மண்ணின் வளத்தைப் பாதுகாத்து நீண்ட கால மண் ஆரோக்கியத்தை உறுதி செய்திட பயிர் சுழற்சி முறையை ஊக்கப்படுத்தும் விதமாகவும் தற்போதைய மழை நிலவரத்தை கருத்தில் கொண்டு குறைந்த அளவில் நீர் தேவைப்படும் மாற்றுப் பயிர்களான சிறுதானியங்கள், பயறுவகை பயிர்கள் மற்றும் எள் சாகுபடியை 1500 ஏக்கர் பரப்பிற்கு ஊக்குவிக்க அரசிடம் இருந்து முன்செல் ஆணை வரப்பெற்றுள்ளது. இத்திட்டத்தின்கீழ் சான்று பெற்ற விதைகள், திரவ உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட கலவைகள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. ஆர்வமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்க அலுவலரை அணுகிட கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும், இனிவரும் காலங்களில் விவசாயிகள் தங்கள் நிலங்களுக்கு உரம் மற்றும் மானியத் திட்டங்களைத் தடையின்றி பெற்றிட விவசாய அடையாள எண்ணைப் பெறுவதுடன், தங்களது அனைத்து உட்பிரிவுகளையும் அடையாள எண்ணுடன் இணைக்க வேண்டும். ஆதலால் நிலம் வைத்துள்ள அனைத்து விவசாயிகளும் அடையாள எண்ணினை பெற ஆதார், ஆதார் உடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண் மற்றும் நில ஆவணங்களான சிட்டா அல்லது பட்டா ஆகியவற்றுடன் அந்தந்த வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கூட்டத்தில் அனைத்து விவசாயிகளின் மனுக்களுக்கும் 15 நாட்களுக்குள் தீர்வு காணப்படும் என்றும், விவசாயிகளிடமிருந்து வரப்பெற்ற மனுக்களுக்கு உரிய பதிலினை உடனடியாக சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கிட அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்.

அதனைத்தொடர்ந்து, தோட்டக்கலைத்துறையின் சார்பில் தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.33,600/- முழு மானியத்திலும், ரூ.84,000/- மானியத்திலும் திசு வாழைக்கன்றுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார். முன்னதாக, விவசா யிகள் சிறப்பு பருவ நெல் பயிருக்கு (ரூ.582/ஏக்கர்) நவம்பர் 15-க்குள் பயிர் காப்பீடு செய்து பயன்பெறும் வகையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கி, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார், மாவட்ட வன அலுவலர்.கிரண், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) .துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, ., வேளாண்மை இணை இயக்குநர் (பொ) மீனா குமாரி, இணைப்பதிவாளர் (கூட்டுறவு) நர்மதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(விவசாயம்) திருமதி வளர்மதி உட்பட பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் மற்றும் விவசாய சங்கப்பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி தாலுகாவில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டம் முகாம் 21ம் தேதி நடக்கிறது



கிருஷ்ணகிரி, அக்.18–

கிருஷ்ணகிரி தாலுகாவில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் வருகிற 21ம் தேதி நடக்கிறது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழ்நாடு அரசின் ஆணையின்படி, மக்களை நாடி மக்கள் குறைகளை கேட்டு, உடனுக்குடன் தீர்வு காண அரசு இயந்திரம் களத்திற்கே வரும் உங்களை தேடி, உங்கள் ஊரில் என்னும் திட்டம் மாவட்ட கலெக்டரால் ஒவ்வொரு மாதமும் மாவட்டத்தில் உள்ள ஏதேனும் ஒரு தாலுகாவில் தங்கியிருந்து அங்கேயே கள ஆய்வில் ஈடுபட்டு, அந்த தாலுகாவில் உள்ள மக்களின் குறைகளை கேட்டறிந்து, அவர்களுக்கு அரசின் அனைத்து நலத்திட்டங்களும், சேவைகளும் தங்கு தடையின்றி சென்று அடைவதை உறுதி செய்யும் பொருட்டு, வருகிற 21ம் தேதி (புதன் கிழமை) காலை 9 மணி முதல் மறுநாள் (22ம் தேதி) காலை 9 மணி வரை கிருஷ்ணகிரி தாலுகாவில் உள்ள வருவாய் கிராமங்களில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்ட முகாம் செயல்படுத்தப்பட உள்ளது. மேலும், வருகிற 21ம் தேதியன்று மாலை 4.30 மணியளவில் கிருஷ்ணகிரி நகராட்சி அலுவலகத்தில், பொதுமக்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற உள்ளது.

இதில் பொதுமக்கள் அனைவரும் கலந்துகொண்டு, தங்கள் கருத்துக்களை தெரிவித்து பயனடையலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.





■ திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் சட்டமன்ற தொகுதி அனைத்திந்திய அண்ணாதிராவிட முன்னேற்ற கழகம் 55ஆண்டு தொடக்கவிழா செங்கம் சட்டமன்றதொகுதி சார்பாக டி.எஸ்.வேலு MLA தலைமையில் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினார் மாலை வாக்காள பெருமக்களுக்கு நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டம் நடைபெறும் என தெரிவித்தனர்.





அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் தாம்பரம் மேற்கு பகுதி சார்பில்

# 55ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்

தாம்பரம் அக்.18–

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கழக பொதுச் செயலாளர் புரட்சி தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் 55ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தாம்பரம் மேற்கு பகுதி சார்பில் மேற்கு பகுதி கழக செயலாளர் கோபிநாத் அவர்கள் தலைமையில் 52வது வட்ட கழகச் செயலாளர் எம்.செந்தில் குமார் அவர்களின் ஏற்பாட்டில் எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே.எம் சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு எம்ஜிஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மேற்கு பகுதி காப்பாளர் சைதைபா ராஜ், ஆர். மல்லிகா, செல்லப்பா, ராஜேந்திரன், பி.பாஸ்கர், மோகன்ராஜ், லலித் ஆர். நிவேதிதன், அய்யனார், எஸ்.ஜெயபிரகாஷ், மேற்கு பகுதி நிர்வாகிகள் வட்ட கழக நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மீண்டும் வாக்குச்சீட்டு முறையே வேண்டும்: திமுக வலியுறுத்தல்

சென்னை, அக்.18–

வாக்குரிமையைப் பறிக்கும் எஸ்ஐஆர் வேண்டாம்; மீண்டும் வாக்குச்சீட்டு முறையே வேண்டும் என்பன திமுக வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்ட தகவல்:

'இன்று நடைபெற்ற திமுக நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள்:

› எஸ்ஐஆரை முழுமையாக ரத்து செய்க.

› தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரைப் பதவி நீக்கம் செய்து விசாரித்திடுக.

› ஜனநாயகத்துக்காகப் போராடும் மாணவர் இயக்கங்களுக்கு முழு ஆதரவு.

› இவிஎம்-க்கு மாற்றாக மீண்டும் வாக்குச்சீட்டு முறையைக் கொண்டு வருக.

› எஸ்ஐஆர் விவகாரத்தில் மாநிலத்துக்கு மாநிலம் மாறும் காங்கிரஸின் நிலைப்பாட்டுக்கும், தவெகவின் மவுனத்துக்கும் கடும் கண்டனம்.

› மக்களின் வாக்குரிமையையும் இந்திய ஜனநாயகத்தையும் பாதுகாக்க, எஸ்ஐஆர் ரத்து மற்றும் வாக்குச்சீட்டு முறை ஆகிய இரு கோரிக்கைகளை வலியுறுத்திக் குடியரசுத் தலைவரிடம் கழக நாடாளு மன்ற உறுப்பினர்கள் மனு அளிப்பார்கள்' என்று ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




# வாலாஜாவில் டிவைன் கஃபே முதலாம் ஆண்டு மற்றும் நிறுவனத்தின் 22-ஆம் ஆண்டு விழா கோலாகலக் கொண்டாட்டம்

வாலாஜா. அக்-18-

இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டை ஸ்ரீ சக்தி அம்மாவின் தெய்வீக அருளாசியுடன், வாலாஜாவில் அமைந்துள்ள 'டிவைன் கஃபே'வின் முதலாம் ஆண்டு விழா மற்றும் டிவைன் கஃபே நிறுவனத்தின் 22-ஆம் ஆண்டு விழா, வாலாஜா டிவைன் கஃபே வளாகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

ஸ்ரீ நாராயணி குழுமங்களின் இயக்குநரும் அறங்காவலருமான பேராசிரியர் டாக்டர் என். பாலாஜி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், விஜய் டிவி நிகழ்ச்சித் தொகுப்பாளரும் நடிகருமான மா. கா. பா. ஆனந்த் மற்றும் மாதம்பட்டி குழுமங்களின் தலைவர் மாதம்பட்டி ரங்கராஜ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கல ந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், ஸ்ரீ சக்தி அம்மாவின் தாயார் திருமதி ஜோதி அம்மாள், திருமதி சாந்தி பாலாஜி, டிவைன் கஃபே மற்றும் ஸ்ரீ சுகி பார்மசி குழுமங்களின் இயக்குநர் ஸ்ரீநாத் பாலாஜி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஸ்ரீ நாராயணி மருத்துவமனை, ஸ்ரீ சுகி பார்மா மற்றும் டிவைன் கஃபே நிறுவனங்களின் ஊழியர்கள் திரளாகப் பங்கேற்றனர்.

விழாவின் சிறப்பம்சமாக, சிறப்பாகப் பணியாற்றிய டிவைன் கஃபே மேலாளர்கள் மற்றும் மருத்துவமனையின் பல்வேறு துறைத் தலைவர்களுக்கு (HODs) அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த பங்களிப்பைப் பாராட்டி விருதுகள் வழங்கப்பட்டன.

நிறுவனத்தின் வளர்ச்சி, சேவைத் தரம் மற்றும் வாடிக்கையாளர் திருப்தியை மேலும் மேம்படுத்தும் நோக்கில் அமைந்த இந்நிகழ்வு, இனிதே நிறைவுற்றது.

# சர்வதேச பெண் குழந்தைகள் தின விழாவினை முன்னிட்டு 2,500 மாணவிகள் பங்கேற்ற சிங்கப்பெண் தற்காப்பு கலை உலக சாதனை நிகழ்ச்சியை அமைச்சர் சரத்குமார் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்

கூடுவாஞ்சேரி, அக்.18-

செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி-நெல்லிக்குப்பம் சாலை ஓரத்தில் உள்ள நந்திவரம் அரசு பெண்கள் மேல்நிலை பள்ளியில், சர்வதேச பெண் குழந்தைகள் தின விழாவினை முன்னிட்டு, மாவட்ட சமூக நலன், மகளிர் உரிமை துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் , ஸ்போர்ட்ஸ் எக்ஸ்னோரா மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் 2,500 மாணவிகள் பங்கேற்ற "சிங்கப்பெண்" தற்காப்பு கலை உலக சாதனை நிகழ்ச்சி நடைபெற்றது.



இதில் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் வீரப்பன் தலைமை தாங்கினார். செங்கல்பட்டு தொகுதி எம்எல்ஏ தியாகராஜன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் சங்கீதா, ஸ்போர்ட்ஸ் எக்ஸ்னோரா தலைவர் டி.ஜி.ஆர் பாபு, முதன்மை கல்வி அலுவலர் திருவளர்செல்வி, வண்டலூர் தாசில்தார் தேவேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி தலைமை ஆசிரியை ஸ்ரீவித்யா அனைவரையும் வரவேற்றார். சிறப்பு விருந்தினராக மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் சரத்குமார் கலந்துகொண்டு சர்வதேச பெண் குழந்தைகள் தின விழாவினை முன்னிட்டு 2,500 மாணவிகள் பங்கேற்ற "சிங்கப்பெண்" தற்காப்பு கலை உலக சாதனை நிகழ்ச்சியை அமைச்சர் சரத்குமார் தொடங்கி வைத்து, பார்வையிட்டார். பின்னர் "சிங்கப்பெண்ணே" தற்காப்பு கலை உலக சாதனை நிகழ்வுக்காக, கிங்டாம் வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவனத்தின் மூலமாக வழங்கப்பட்ட பாராட்டு சான்றிதழினையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இதனை அடுத்து, மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டத்தின் மூலம், பெண் குழந்தைகளை காப்போம், பெண் குழந்தைகளுக்குக் கற்பிப்போம் திட்டத்தின் கீழ், பள்ளிக்கல்வி துறை மற்றும் ஸ்போர்ட்ஸ் எக்ஸ்னோரா என்கிற தன்னார்வ தொண்டு நிறுவன அமைப்பின் ஆதரவுடன் 2026 ஆம் ஆண்டு சர்வதேச பெண் குழந்தைகள் தினத்தை கொண்டாடும் வகையில், இன்றைய தினம் "சிங்கப்பெண்ணே" என்ற கருப்பொருளில், பெண் குழந்தைகளின் தன்னம்பிக்கை, துணிச்சல் மற்றும் தற்காப்பு திறனை ஊக்குவிக்கும் வகையில், சுமார் 2,500 மாணவிகள் பங்கேற்கும் தற்காப்பு கலை உலக சாதனை முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து, கல்வி மற்றும் விளையாட்டு துறைகளில் சிறந்து விளங்கும் மாணவிகளுக்குப் பெண் குழந்தைகளை பாதுகாப்போம் பெண் குழந்தைகளுக்கு கற்பிப்போம் திட்டத்தின் கீழ் கௌரவ தூதர்களுக்கான பாராட்டு சான்றிதழினை மனிதவள மேலாண்மை துறை அமைச்சர் சரத்குமார் வழங்கினார்.

பின்னர், நந்திவரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் எக்ஸ்னோரா அமைப்பின் மூலமாக அமைக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானத்தை பார்வையிட்டு ஆய்வு செய்த அமைச்சர் ஸ்போர்ட்ஸ் எக்ஸ்னோரா தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலமாக பெறப்பட்ட பல்வேறு விளையாட்டு உபகரணங்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

இதில், தாம்பரம் வருவாய் கோட்டாட்சியர் வெங்கடாசலம், பயிற்சி ஆட்சியர் பிரசிகா, மறைமலைநகர் நகராட்சி ஆணையர் லதா, எக்ஸ்னோரா நிறுவனத்தின் தலைவர் செந்தூர்பாரி, கிங்டாம் வேர்ல்ட் ரெக்கார்ட் நிறுவன பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.





# குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப் பள்ளியில் பிரதமரின் சூரிய மின்சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம்

நீலகிரி, அக்.18-

பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சாரத் திட்டத்தின் கீழ் வீடுகளில் சூரிய மின்சக்தி தகடுகள் (சோலார் பேனல்) அமைக்க மத்திய,மாநில அரசுகளின் சார்பில் ரூ.1 லட்சம் வரை மானியம் வழங்குவதாக தெரிவிக்கப்பட்டது.நீலகிரி மாவட்டம் குன்னூர் புனித அந்தோணியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பிரதம மந்திரி சூரிய மின்சக்தி திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாமில் குன்னூர் உதவி செயற்பொறியாளர்,ஜான்சன் தலைமையில் குன்னூர் சட்டமன்ற உறுப்பினர் கே.எம்.ராஜு, குன்னூர் சார் ஆட்சியர் காஞ்சன் சவுத்ரி மற்றும் மின்சார துறை செயற் பொறியாளர் காதர் நவாஸ், செயற்பொறியாளர்,(பொது) சரவண குமார்,உதவி செயற் பொறியாளர், ஜான்சன். மேற்பார்வை பொறியாளர் சங்கர் உதவி மின் பொறியாளர்கள் அலுவலர்கள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

மின் தேவையை குறைக்கும் நோக்கில் பொதுமக்கள் தங்களது வீடுகளின் மேற்கூரைகளில் சூரிய மின்சக்தி தகடுகளை அதிகளவில் அமைக்க முன்வர வேண்டும். இதற்காக மத்திய, மாநில அரசுகள் பெருமளவில் மானிய உதவி வழங்கி வருகின்றன.

மேலும் இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய சட்டமன்ற உறுப்பினர் கே.எம் ராஜு, மற்றும் அதிகாரிகள் கூறுகையில் நாடு முழுவதும் ஒரு கோடி வீடுகளுக்கு இலவச மின்சாரம் உற்பத்தி செய்யும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு,வரும் இத்திட்டத்தின் மூலம் பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சூரிய மின் சக்தி தகடுகளை பொருத்தி பயணடைய வேண்டும் என கேட்டு கொண்டனர்.



■ கிருஷ்ணகிரி அவதனப்பட்ட ஏரி பகுதியில் ரூ.2 கோடி மதிப்பீட்டில் படகு இல்லம் மற்றும் பிறவசதி பணிகளுடன் மேம்படுத்தப்பட்ட சிறுவர் பூங்காவினை தொழில்துறை அமைச்சர்கீர்த்தனா தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன், ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் இளையராஜா மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# ஆற்காடு ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் ஐந்தாம் சனி சிறப்பு பூஜை

ராணிப்பேட்டை, அக்.18-

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு தென் பாலாற்றங்கரையில் எழுந்தருளி அருள் பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ பெருந்தேவி தாயார் சமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோயிலில் புரட்டாசி மாதம் ஐந்தாம் சனிக்கிழமை முன்னிட்டு சிறப்பு பூஜை நடைபெற்றது.

முன்னதாக அதிகாலை 5 மணிக்கு ஸ்ரீ வரதராஜ பெருமாளுக்கும். பெருந் தேவி தாயாருக்கும் பல்வேறு திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகமும், வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு முத்தங்கி சேவையில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

ஐந்தாம் வாரம் கைங்கரியம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் வி. கே. ஆர். சீனிவாசன் குடும்பத்தினர் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை அறங்காவலர் குழு தலைவர் ஏ.பி. சத்தியநாராயணன், அறங்காவலர் குழு உறுப்பினர்கள் தேவி, வாசுகிசரவணன். சீனிவாசன், சேஷாத்திரி ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். இறுதியில் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் வ.சிவகிருஷ்ணமூர்த்தி, செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது



தேனி, அக்.18-

தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகள், பாலிடெக்னிக் கல்லூரிகள், நர்சிங் கல்லூரிகள் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கான கல்விக்கடன் வழங்கும் முகாம் 16.10.2026 அன்று கொடுவிலார்பட்டி கம்மவார் சங்கம் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் எட்டு கல்லூரிகளில் பயிலும் 200 மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆறு வங்கிகள் மூலம் உதவி மையங்கள் அமைக்கப்பட்டு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இம்முகாமில் விண்ணப்பித்த மாணவர்களில் 12 மாணவர்களுக்கு ரூ.1 கோடி கல்விக்கடன் வங்கிகளின் மூலம் ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும், தேனி மாவட்டத்திற்கு கல்விக்கடன் தொகை ரூ.40 கோடி தமிழக அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதுஆகையால் உயர் கல்வி பயின்று கொண்டிருக்கும் மாணவர்கள் கல்விக்கடன் தேவைப்படின் Vidyalakshmi Portal என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் .வ.சிவகிருஷ்ணமூர்த்தி, தெரிவித்துள்ளார்.

# வீர, தீர செயலுக்கான அண்ணா பதக்கத்துக்கு விண்ணப்பிக்க அழைப்பு

சென்னை, அக்.18-

2027-ம் ஆண்டின் வீர, தீரச் செயல்களுக்கான 'அண்ணா பதக்கம்' விருதுக்கு பரிந்துரைகள் https://awards.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக கோரப்ப டுகின்றன. பரிந்துரைகள் இணைய தளத்தில் அதற்கென உள்ள படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கி யதாகவும், விருதுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்களின் வீரதீர செயல்க ளை பற்றி எடுத்துரைக்கும் தகுதியுரையுடன் இருக்க வேண்டும். தகுதியுரை அதிகபட்சம் 800 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். 'அண்ணா விருது'க்கு பரிந்துரைப்பதற்கான கடைசி தேதி டிச.15 ஆகும். இணையதளத்தில் பெறப்படும் பரிந்துரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். உரிய காலத்துக்குள் பெறப்படாத பரிந்துரைகள் நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர்கள், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படுவர்.

# அழிஞ்சிவாக்கம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ரூ. 72.68 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழா

மாதவரம், அக்.18-

மாதவரம் தொகுதி புழல் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட அழிஞ்சிவாக்கம் ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நபார்டு நிதி உதவி திட்டத்தின் கீழ் ரூபாய் 72 லட்சத்து 68 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நான்கு வகுப்பறை கட்டிடங்கள் திறப்பு விழாவிற்கு புழல் வட்டார வளர்ச்சி அலுவலர் வெங்கடேசன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர் விமலா, வட்டார கல்வி அலுவலர் ராஜேந்திரன், பள்ளி தலைமையாசிரியர் ஓ.வி. நாராயணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு கலந்துகொண்டு கட்டி முடிக்கப்பட்ட புதிய வகுப்பறை கட்டிடத்தை ரிப்பன்வெட்டி திறந்து



வைத்தனர்.பின்னர் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு மற்றும் அடையாள அட்டைகளை வழங்கினார். இதில் தவெக புழல் ஒன்றியச் செயலாளர் என்.எஸ். மைக்கேல்ராஜன், உதவி செயற்பொறியாளர் செந்தில்குமார், ஊராட்சி செயலர்கள் இனியவன்,பொன்னையன் , உல்லாசம் பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் ஸ்ரீபானுமதி உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், பெற்றோர்கள், தவெக புழல் ஒன்றியம் மற்றும் மாவட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி, கிளைக் கழக நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# தாம்பரம் மத்திய பகுதி சார்பில் அதிமுகவின் 55ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி இனிப்புகள் வழங்கினார்கள்

தாம்பரம், அக்.18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரத்தில் கழக பொதுச் செயலாளர் புரட்சி தமிழர் எடப்பாடியார் அவர்களின் ஆணைக்கிணங்க அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் 55ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு தாம்பரம் மத்திய பகுதி கழக சார்பில் தாம்பரம் சண்முகம் ரோட்டில் அமைந்துள்ள மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர் புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி தாம்பரம் மத்திய பகுதி கழகச் செயலாளர் எல்.ஆர். செழியன் தலைமையில் நடைபெற்றது



இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.இராசந்திரன், முன்னாள் அமைச்சர் டி.கே. எம் சின்னையா ஆகியோர் கலந்து கொண்டு சண்முகா சாலையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்ட முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர் புரட்சித்தலைவி ஜெயலலிதா ஆகியோரின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி கழக கொடி ஏற்றி பின்னர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள்

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் வேலு, அம்மா பேரவை துணைச் செயலாளர் சம்பத்து, மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் மாரி, மத்திய பகுதி அவை தலைவர் மார்க்கெட் காசி, மத்திய பகுதி துணைச் செயலாளர் கஜா, மாவட்ட பிரதிநிதிகள் கணேஷ், சுலேஷனா, மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் அமுதா, தினேஷ், சுபாஷ், வட்டச் செயலாளர்கள் ராஜா, ஜேசுராஜ், சிவா, வெற்றி, வெங்கடேசன், பாலாஜி, மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள் மத்திய பகுதி கழக நிர்வாகிகள் வட்டச் செயலாளர்கள் பிற அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.





# சிவகங்கை மாவட்ட காவல் அலுவலகத்தில் நவீன ஆயுதக் கண்காட்சி!

## ஏகே-47, இன்சாஸ் உள்ளிட்ட பல்வேறு துப்பாக்கிகள் காட்சிப்படுத்தல் – மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வை!

சிவகங்கை. அக்-18

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு காவல்துறையினர் பயன்படுத்தும் நவீன ஆயுதங்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் அடங்கிய சிறப்பு ஆயுதக் கண்காட்சி நடைபெற்றது.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா உத்தரவின்பேரில் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கண்காட்சியைப் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். கண்காட்சியைப் பார்வையிட்ட மாணவர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, துப்பாக்கிகளின் வகைகள், அவற்றின் வரலாறு, பயன்பாடுகள் மற்றும் காவல்துறைப் பணிகளில் அவற்றின் முக்கியத்துவம் குறித்து விளக்கமளித்தார்.

ஏகே-47 முதல் ஸ்னைப்பர் துப்பாக்கி வரை!

கண்காட்சியில் .303 ரகத் துப்பாக்கி, 7.62 மி.மீ. எஸ்.எல்.ஆர்., ஏகே-47, 5.56 மி.மீ. இன்சாஸ், எக்ஸ்கேலிபர், அமோக், கட்டக், 9 மி.மீ. கார்பைன், 12 போர் பம்ப் ஆக்‌ஷன் துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் இடம்பெற்றன.

மேலும், 38 மி.மீ. கண்ணீர்ப்புகைக் குண்டு செலுத்தும் துப்பாக்கி, மல்டிஷெல் லாஞ்சர், ஸ்னைப்பர் துப்பாக்கி, 9 மி.மீ. கைத்துப்பாக்கி, .380 ரிவால்வர், சிக்னல் பிஸ்டல் மற்றும் கையெறி குண்டுகள் உள்ளிட்டவையும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. காவல்துறையின் செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்படும் பணிகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் இக்கண்காட்சி நடைபெற்றது.

முக்கியச் செய்தி செய்தி ஸ்லைடுக்கு

சிவகங்கையில் காவல்துறையின் நவீன ஆயுதக் கண்காட்சி!

ஏகே-47, இன்சாஸ், ஸ்னைப்பர் துப்பாக்கிகள் காட்சிப்படுத்தல் மாணவர்கள் ஆர்வத்துடன் பார்வை!

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் எஸ். பி. அபிஷேக் குப்தா உத்தரவின்பேரில் நவீன ஆயுதக் கண்காட்சி நடைபெற்றது.ஏகே-47, இன்சாஸ், எக்ஸ்கேலிபர், ஸ்னைப்பர் துப்பாக்கிகள் மற்றும் காவல்துறையின் பாதுகாப்பு உபகரணங்கள் காட்சிப்படுத்தப்பட்டன.

மாணவ, மாணவியருக்கு ஆயுதங்களின் வகைகள், பயன்பாடுகள் மற்றும் காவல்துறைப் பணிகளில் அவற்றின் முக்கியத்துவம் குறித்து மாவட்ட எஸ். பி. அபிஷேக் குப்தா விளக்கமளித்தார்.

பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

# குலசேகரன்பட்டினம் தசரா திருவிழாவில் ரீல்ஸ் எடுப்போரால் பக்தர்களுக்கு இடையூறு

தூத்துக்குடி, அக்.18–

குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயில் தசரா விழாவில் இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூபர்கள் ஆதிக்கத்தால், சுவாமி தரிசனம் செய்ய முடியாமல் பக்தர்கள் தவிப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.



தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயிலில் பிரசித்தி பெற்ற தசரா திருவிழா கடந்த 11-ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. அன்று மட்டும் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் குவிந்தனர். இவ்விழாவில் தினமும் இரவு 10 மணிக்கு மேல் அம்மன் பல்வேறு வாகனங்களில், பல்வேறு திருக்கோலங்களில் எழுந்தருளி வீதியுலா வரும் நி கழ்வு நடைபெற்று வருகிறது. இதிலும், ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்று அம்மனை வழிபடுகின்றனர். தினமும் பல்வேறு ஊர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் வருகை தந்து அம்மனை தரிசிக்க நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர். இவ்வாறு காத்திருக்கும் பக்தர்களை அம்மனை முழுமையாக தரிசனம் செய்ய விடாமல் தடுக்கும் வகையில், இன்ஸ்டாகிராம் மற்றும் யூடியூபர்கள் நடந்து கொள்வதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

ஒவ்வொரு நாள் இரவிலும் அம்மன் வீதி உலா புறப்பாட்டின் போது இன்ஸ்டாகிராம், யூடியூப் போன்ற சமூக வலைத்தளங்களில் ரீல்ஸ், வீடியோ, புகைப்படம் போடுவதற்காக, இவர்கள் செல்போன்களுடன் அம்மனுக்கு முன்னால் குவிந்துவிடுகின்றனர். சிலர் கைகளிலேயே செல்போனை உயர்த்தி பிடித்து வீடியோ மற்றும் படம் எடுக்கின்றனர். சிலர் நீளமான ஸ்டிக் வைத்து செல்போன் மூலம் பதிவு செய்கின்றனர். ஒரே நேரத்தில் 100-க்கும் மேற்பட்டோர் அம்மனுக்கு முன்னால் நின்று கொண்டு வீடியோ பதிவு செய்வதால் பக்தர்களால் அம்மனை முழுமையாக தரிசிக்க முடியவில்லை என பக்தர்கள் பலரும் வேதனையோடு தெரிவித்தனர்.

தினந்தோறும் இரவில் அம்மன் வீதி உலா புறப்பாட்டின் போது இன்ஸ்டாகிராம், யூடியூபர்கள் ஆதிக்கத்தால் பக்தர்கள் மிகுந்த மனவேதனைக்கு உள்ளாகின்றனர். எனவே, இதனை கட்டுப்படுத்த கோயில் நிர்வாகமும், இந்து சமய அறநிலையத் துறையும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பக்தர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# திருநெல்வேலியில் வைர நகைகளின் பிரம்மாண்ட திருவிழா! – ஜோய்ஆலுக்காஸில் 'பிரில்லியன்ஸ் டயமண்ட் ஷோ' கோலாகலத் தொடக்கம்

## ரூ.1 லட்சத்திற்கு மேல் வைர நகைகள் வாங்கினால் தங்க நாணயம் இலவசம்

திருநெல்வேலி, அக்.18–

உலகப் புகழ்பெற்ற ஜோய்ஆலுக்காஸ் நகைக்கடையின் திருநெல்வேலி ஷோரூமில், 'பிரில்லியன்ஸ் டயமண்ட் ஜுவல்லரி ஷோ' என்ற பிரம்மாண்ட வைர நகைக் கண்காட்சி தொடங்கியது. அக்டோபர் 16-ந் தேதி முதல் நவம்பர் 1-ந் தேதி வரை நடைபெறும் இக்கண்காட்சியில், பாரம்பரிய மற்றும் நவீன வடிவமைப்புகளிலான பிரத்யேக வைர நகைகள் இடம்பெற்றுள்ளன.



திருமண விழாக்களுக்கான பிரம்மாண்ட நகை செட்கள் முதல் அன்றாடம் அணியக்கூடிய நவீன வைர நகைகள் வரை பல்வேறு வடிவமைப்புகள் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதுகுறித்து ஜோய்ஆலுக்காஸ் குழுமத் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஜோய் ஆலுக்காஸ் கூறுகையில், வைரங்களின் தனித்துவமான அழகையும், சிறந்த கைவினைத்திறனையும் வெளிப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும், கண்காட்சி நடைபெறும் நாட்களில் ரூ.1 லட்சம் மற்றும் அதற்கு மேல் வைர நகைகள் வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு ஒரு தங்க நாணயம் இலவசமாக வழங்கப்படுகிறது.

வைர நகைப் பிரியர்களுக்கு சிறப்பான ஷாப்பிங் அனுபவத்தை வழங்கும் இந்தக் கண்காட்சி, திருநெல்வேலி ஜோய்ஆலுக்காஸ் ஷோரூமில் நவம்பர் 1-ந் தேதி வரை நடைபெறுகிறது.

# ஹிஜாப் அணிந்து முருகன் பாடலை பாடியதற்காக இஸ்லாமிய சிறுமிக்கு மிரட்டல் விடுப்பதா? – நயினார் நாகேந்திரன் கண்டனம்

சென்னை, அக்.18–

ஹிஜாப் அணிந்து முருகன் பாடலைப் பாடிய இஸ்லாமிய சிறுமிக்கு மிரட்டல் விடுத்தவர்களுக்கு நயினார் நாகேந்திரன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து தனது எக்ஸ் தளப் பதிவில் அவர் கூறியிருப்பதாவது: தனியார் தொலைக்காட்சியில் நடைபெற்ற ஒரு பாட்டு நிகழ்ச்சியில், ஹிஜாப் அணிந்த ஒரு இஸ்லாமிய சிறுமி, 'அழகன் முருகனிடம் ஆசை வைத்தேன்' என்ற பக்திப் பாடலைப் பாடினார் என்பதற்காக, அச்சிறுமிக்கு சில இஸ்லாமியர்கள் மிரட்டல் விடுப்பதை ஆளும் தவெக அரசின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன். கிறிஸ்தவ மதத்தைப் பின்னணியாகக் கொண்ட, கே.ஜெ.யேசுதாஸின் ஐயப்பன் பாடல்களையும், எல்.ஆர்.ஈஸ்வரியின் அம்மன் பாடல்களையும் கொண்டாடி, ரசித்து வரும் நமது தமிழ் சமூகத்தில், மற்ற மதத்தினர் இந்து பக்திப் பாடல்களை பாடுவது ஒன்றும் புதிதல்ல. அதேபோல், இந்து மதத்தைச் சேர்ந்த பலர், இஸ்லாமிய மற்றும் கிறிஸ்தவப் பக்திப் பாடல்களையும் பாடியுள்ளனர். 'கலை' என்ற குடையின் கீழ், நாம் அனைவரும் சமம். அப்படியிருக்கையில் முருகனின் பாடலைப் பாடியதற்காக ஒரு இஸ்லாமிய சிறுமி மீது, இத்தனை வெறுப்புகள் பரப்பப்படுவது மன வேதனையளிக்கிறது. எனவே, சம்பந்தப்பட்ட சிறுமிக்கு மிரட்டல் விடுப்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதோடு, அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் அரசு முழு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என முதல்வர் விஜய்யிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். அதுமட்டுமன்றி, அச்சிறுமிக்கு தமிழக மக்கள் அனைவரும் துணையாக நிற்க வேண்டு மென்றும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு ஊரக தொழில் கடனாக ரூ.5,000 கோடி வழங்க தமிழக அரசு இலக்கு: அமைச்சர் காந்திராஜ் தகவல்

சென்னை, அக்.18–

கூட்டுறவுத் துறை அமைச்சர் காந்திராஜ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: தமிழக அரசின் 202627-ம் ஆண்டுக்கான கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் வெளியிட்ட அறிவிப்பின்படி விவசாயிகள், அதுசார்ந்த தொழில்களில் ஈடுபடும் சிறு, குறு விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் ரூ.5,000 கோடியில் ஊரகத் தொழில் கடன் ஆண்டுக்கு 9 சதவீத வட்டி விகிதத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்படி, ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக ரூ.5 லட்சம் வரை கடன் வழங்கப்படும். கடன் வழங்கிய நாளில் இருந்து, 36 மாதங்களுக்குள் வட்டியுடன் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். மேலும், தேவைக்கேற்ப 3 முதல் 6 மாதங்கள் வரை தவணைச் சலுகைக் காலம் வழங்கப்படும்.

இந்த நிதியாண்டில் இத்திட்டத்தின்கீழ், மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.2,000 கோடியும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் ரூ.3,000 கோடியும் என மொத்தம் ரூ.5,000 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதில் குறு விவசாயிகள், பெண் விவசாயிகள் மற்றும் விளிம்புநிலை பிரிவினருக்கு முன்னுரிமை அளிக்கவும், கடன் வசூல் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபடும் சிறு, குறு விவசாயிகள் தங்கள் வருவாயை அதிகரிக்கும் நோக்கில் செயல்படுத்தப்படும் இந்த ஊரகத் தொழில் கடன் திட்டத்தின்கீழ் பயன் பெறலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீர, தீர செயலுக்கான அண்ணா பதக்கத்துக்கு விண்ணப்பிக்க அழைப்பு

சென்னை, அக்.18–

தமிழக அரசின் பொதுத்துறை செயலர் வெளியிட்ட செய்திக்குறிப்பு: தமிழக அரசின் சார்பில் வீர, தீரச் செயல் புரிந்தவர்களுக்கான 'அண்ணா பதக்கம்' ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தின விழாவி ன்போது, முதல்வரால் வழங்கப்பட்டு வருகிறது.

2027-ம் ஆண்டின் வீர, தீரச் செயல்களுக்கான 'அண்ணா பதக்கம்' விருதுக்கு பரிந்துரைகள் https://awards.tn.gov.in என்ற இணையதளத்தின் வாயிலாக கோரப்ப டுகின்றன. பரிந்துரைகள் இணைய தளத்தில் அதற்கென உள்ள படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்களை உள்ளடக்கி யதாகவும், விருதுக்காக பரிந்துரைக்கப்படும் நபர்களின் வீரதீர செயல்களை பற்றி எடுத்துரைக்கும் தகுதியுரையுடன் இருக்க வேண்டும். தகுதியுரை அதிகபட்சம் 800 வார்த்தைகளுக்கு மிகாமல் இருக்க வேண்டும். 'அண்ணா விருது'க்கு பரிந்துரைப்பதற்கான கடைசி தேதி டிச.15 ஆகும். இணையதளத்தில் பெறப்படும் பரிந்துரைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும். உரிய காலத்துக்குள் பெறப்படாத பரிந்துரைகள் நிராகரிக்கப்படும். பதக்கம் பெறத் தகுதியுள்ளவர்கள், இதற்கென அரசால் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்படுவர்.

# 'ஏசி' காத்திருப்பு அறை உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் தமிழகத்தில் 25 நவீன பத்திரப் பதிவு மையங்கள்: பதிவுத் துறை டெண்டர் வெளியீடு

சென்னை, அக்.18–

தமிழகத்தில் பத்திரப் பதிவு சேவைகளை மேம்படுத்த நவீன வசதிகளுடன் கூடிய 25 மாதிரி பதிவு மையங்கள் அமைக்கப்பட உள்ளன. இதற்கான ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய டெண்டர் வெளியிடப்பட்டுள்ளது.




தமிழகத்தில் 582 சார்பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. இங்கு பத்திரப் பதிவுக்காக நீண்ட நேரம் காத்திருப்பு மற்றும் கூட்ட நெரிசலைக் குறைப்பதற்காக 25 நவீன மாதிரி பதிவு மையங்கள் அமைக் கப்படும் என்று பதிவுத் துறை அமைச்சர் டி.லோகேஷ் தமிழ்செல்வன் கடந்த சட்டப்பேரவைக் கூட்டத் தொடரில் அறிவிப்பு வெளியிட்டிருந்தார்.

இதற்கான டெண்டர் அறிவிப்பை பதிவுத் துறை தற்போது வெளியிட்டுள்ளது. தகுதியுள்ள நிறுவனங்கள் tntenders.gov.in இணையதளத்தில் நவ.16-ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும். டெண்டரில் பங்கேற்க ரூ.65 லட்சம் முன்வைப்புத் தொகையாகச் செலுத்த வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய மையங்களில் ஏசி வசதியுடன் கூடிய காத்திருப்பு அறைகள், டோக்கன் முறை, கைரேகை உள்ளிட்ட அடையாள சரிபார்ப்பு வசதி, உதவி மையங்கள், குடிநீர் மற்றும் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. சிசிடிவி கேமராக்கள் மூலமாகவும் கண்காணிக்கப்படும்.

ஆவணங்களை விரைவாக சரிபார்த்துப் பதிவு செய்வதுடன், இடைத்தரகர்களின் தலையீட்டைக் குறைத்து, வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதும் இதன் நோக்கம் ஆகும். இந்த மையங்களை வடிவமைத்துப் பராமரிக்கும் பணிகள் தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளன.

இதற்கான ஒப்பந்தக் காலம் 5 ஆண்டுகள். முதல் கட்ட சோதனை முயற்சியாக 5 நவீன பதிவு மையங்கள் அமைக்கப்படும். அதற்கான வரவேற்பைப் பொருத்து அடுத்தகட்டமாக மேலும் 20 மையங்கள் அமைக்கப்படும்.

இதன் மூலம் மொத்தம் 25 மையங்கள் உருவாக்கப்பட உள்ளன. இத்திட்டம் செயல்பாட்டுக்கு வரும்போது, பத்திரப் பதிவுக்காக காத்திருக்கும் நேரத்தைக் குறைத்து, பொதுமக்களுக்கு மேம்பட்ட சேவைகளை வழங்க முடியும் என்று துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சிறு வயதில் இருந்து ரேஷன் அரிசிதான் சாப்பிடுகிறேன்: அமைச்சர் வெங்கடரமணன் தகவல்

சென்னை, அக்.18–

தமிழகத்தில் ரேஷன் கடையில் அரிசி மிகவும் தரமாக இருக்கிறது. நானும் சிறு வயதில் இருந்து ரேஷன் அரிசிதான் சாப்பிடுகிறேன் என்று உணவுத்துறை அமைச்சர் வெங்கடரமணன் தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சியில் மூலதன நிதியின் கீழ் ரூ.8.49 கோடியில் மயிலாப்பூர் லஸ் சர்ச் சாலையில், புனரமைக்கப்பட்ட நாகேஸ்வர ராவ் பூங்காவை உணவுத் துறை அமைச்சர் ப.வெங்கட்ரமணன் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக நேற்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதன்பின் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: கடந்த ஆட்சியில் ரூ.12 கோடியாக மதிப்பீடு செய்யப்பட்ட பொருட்களின் தேவைகளை குறைத்து, ரூ.8 கோடியில் நாகேஸ்வர ராவ் பூங்கா புனரமைக்கப்பட்டுள்ளது.

பொன்னி அரிசி சாப்பிடுவதை மக்கள் சமூக அந்தஸ்தாக (சோஷியல் ஸ்டேட்டஸ்) பார்க்கிறார்கள் என்று நான் ஆங்கிலத்தில் கூறியது தவறாக புரிந்துகொள்ளப்படுகிறது. மக்களின் விருப்பம் என்றுதான் நான் சொன்னேன். நானும் சிறு வயதில் இருந்து ரேஷன் அரிசிதான் சாப்பிடுகிறேன்.

சோஷியல் ஸ்டேட்டஸ் என்பது மக்கள் விருப்பத்துக்காக சாப்பிடுவது. வார இறுதி நாட்களில் சனி, ஞாயிறுக்கிழமைகளில் வெளியில் சென்று சாப்பிடுவோம். அது ஒரு சந்தோஷம், நம்ம குடும்பத்துக்காக செலவிடும் நேரம் அது. அதைதான் சொன்னேன்.

தரமான அரிசி

வெங்காய விலையை கட்டுப்படுத்த மத்திய அரசின் கிடங்கில் இருந்து கொள்முதல் செய்து அமுதம் அங்காடி மற்றும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் வெளி மார்க்கெட்டைவிட குறைந்த விலையில் விற்பனை செய்கிறோம்.

மலிவு விலையில் 1 லட்சம் மெட்ரிக் டன் அரிசியை கொள்முதல் செய்து, குறைந்தபட்சம் 5 கிலோ அரிசியை அனைத்து ரேஷன் கடைகளிலும் ரூ.30-க்கு வழங்குகிறோம்.

ரேஷன் கடையில் அரிசி தரமாக இருக்கிறது. மக்கள் இதைதான் சாப்பிட வேண்டும் என்று நான் கட்டாயப்படுத்த மாட்டேன். ஒவ்வொரு மக்களின் வாழ்வாதாரமும் மிக முக்கியம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# அமெரிக்க பள்ளியில் துப்பாக்கிச் சூடு: 4 பேர் உயிரிழப்பு

வாஷிங்டன், அக்.18–

அமெரிக்காவின் ஓரேகான் மாகாணம் பெண்ட் நகரில் செயல்படும் சில்வர் ரயில் தொடக்கப் பள்ளியில் 450 மாணவர்கள் படிக்கின்றனர். 40-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்.




இந்த சூழலில் நேற்று முன்தினம் துப்பாக்கியுடன் பள்ளி வளாகத்தில் நுழைந்த 16 வயது சிறுவன் திடீரென துப்பாக்கியால் சரமாரியாக சுடத் தொடங்கி னார். இதில் ஒரு ஆசிரியர் மற்றும் 3 மாணவர்கள் உயிரிழந்தனர். மகனை பள்ளிக்கு அழைத்து வந்த தந்தை ஒருவர், துப்பாக்கிச்சூடு நடத்திய சிறுவனை துப்பாக்கியால் சுட்டார். இதில் அந்த சிறுவன் உயிரிழந்தார். ஒரு ஆசிரியர், ஒரு மாணவர் காயமடைந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161